<u>உசிலம்பட்டி நகராட்சி மன்றம்</u>

<u>நகர்மன்றக்கூட்டம்</u>

<u>நாள். 31.12.2018 திங்கட்கிழமை நேரம் : காலை 10.00 மணி</u>

## <u>நகர்மன்றக்கூட்டம் : நாள். 31.12.2018</u>

<u>மன்றப்பொருள்:1</u>

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தனியார் மூலம் துப்புரவு பணியை 25 நபர்கள் கொண்டு மேற்கொள்வதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 28.12.2018–ம் தேதி வெள்ளிக்கிழமை இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன இதன் விபரம்

| | | |
|---|---|---|
| 1 | திரு. பகவதிராஜன் த/பெ. பி.அழகர்சாமி, தொட்டப்பநாயக்கனூர், அஞ்சல், உசிலம்பட்டி தாலுகா | ஒரு துப்புரவு பணியாளர்களுக்கு தினக்கூலி EST, EPF, LIC சீருடை மற்றும் உபகரணங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 440 என்றும் |
| 2 | திரு. கா.ஹரிகரன் த/பெ. காசிமாயன், ரத்தினசாமித்தேவர் தெரு, பி.எம்.டி.நகர், உசிலம்பட்டி | ஒரு துப்புரவு பணியாளர்களுக்கு தினக்கூலி EST, EPF, LIC சீருடை மற்றும் உபகரணங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 437 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கா.ஹரிகரன் த/பெ.காசிமாயன் அவர்களுக்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கா.ஹரிகரன் த/பெ. காசிமாயன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று 1.1.2019 முதல் 3 ஆண்டுகளுக்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 930/2018/எச்.1)

<u>பொருள்: 2</u>

உசிலம்பட்டி நகராட்சியில் 24 வார்டுகளிலும் உள்ள மினிபவர் பம்புகள் பழுது நீக்கம் செய்யும் பணியை நகராட்சியில் செய்வதற்கு போதுமான அளவு பணியாளர்கள் இல்லாததால் தனியார் மூலம் செய்வதற்கு அனுமதி பெற்று குடிநீர் அவசர அவசியம் கருதி இப்பணியை மேற்கொண்ட M/s. N.P.K. பாண்டி ரீவைண்டிங் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 2,23,565/–யை வழங்குவதற்கும், செலவு செய்த தொகைக்கும் மன்ற அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)–ன்கீழ் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**<u>பொருள்: 3</u>**

இந்நகராட்சி 2017–18–ம் ஆண்டுக்குரிய வருவாய் மூலதன நிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதிகளுக்கு, தணிக்கை முடிக்கப்பட்டு, தணிக்கை அறிக்கை தட்டச்சு செய்து, ஆண்டுக்கணக்குகள் ஜெராக்ஸ் செய்து புத்தக வடிவில் 6 எண்ணம் தயார் செய்தமைக்குரிய செலவினம் ரூ. 9600+ரூ.6000/– மொத்தம் ரூ. 15,600/– (ரூபாய் பதினைந்து ஆயிரத்து ஆறுநூறு மட்டும்) முருகன் டைப் ஆபீஸ், மதுரை–2 நிறுவனத்தின் உரிமையாளர் திருமதி. பி.பரமேஸ்வரி அவர்களுக்கு வருவாய் நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

---

**<u>மன்றப்பொருள்: 4</u>**

உசிலம்பட்டி நகராட்சியின் 2017–18–ம் ஆண்டு வருவாய் மூலதனநிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதிகளுக்கு தணிக்கை செய்தமைக்குரிய தணிக்கை கட்டணம் ரூ. 80,743/– (ரூபாய் எண்பதாயிரத்து எழுநூற்று நாற்பது மூன்று மட்டும்) சார்நிலைக்கருவூலக அரசுத்தலைப்பில் 0070 Others Administrative Servical 60 other service – 110 for Govt. Audit AA Fees for Govt. Audit என்ற தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

---

**<u>மன்றப்பொருள்:5</u>**

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் திரு. பாண்டித்துரை, என்பவர் தொடர்ந்துள்ள வழக்கு W.P.No.20304 of 2018 –ற்கு வழக்காடு கட்டணம் ரூ. 7500/–யை திரு. கே.மகேந்திரன் வழக்கறிஞருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்:6</u>**

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் திரு. சுந்தரராஜ், என்பவர் தொடர்ந்துள்ள வழக்கு W.P.No.24031 of 2018 –ற்கு வழக்காடு கட்டணம் ரூ. 7500/–யை திரு. கே.மகேந்திரன் வழக்கறிஞருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.

---

**மன்றப்பொருள்:7**

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் கவிதா, என்பவர் தொடர்ந்துள்ள வழக்கு W.P.No.13448 of 2018 –ற்கு வழக்காடு கட்டணம் ரூ. 7500/–யை திரு. கே.மகேந்திரன் வழக்கறிஞருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

---

**மன்றப்பொருள்:8**

திருமதி. ராஜேஸ்வரி என்பவர் வீட்டுவரி வசூல் செய்தது சம்பந்தமாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கிற்கு வழக்காடீடு கட்டணம் ரூ. 2000/–யை வழக்கறிஞர் திரு.பி.லட்சுமணன் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

---

**மன்றப்பொருள்:9**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட முறையான கட்டிட அனுமதி பெறாமல் இயங்கி வந்த மண்டபங்கள் மீது திரு.கட்டளை பி.பிரகாஷ் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். அதன் வழக்கு எண். W.P.No.20826 of 2017 –ற்கு திரு. மகேந்திரன், நகராட்சி வழக்கறிஞருக்கு வழக்காடு கட்டணம் ரூ. 7500/– வழங்க மன்றம் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.கஎண். 2324/2017/எப்)

---

**மன்றப்பொருள்:10**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16, மதுரை மெயின் ரோட்டில் நகராட்சிக்குச் சொந்தமான பாதையை ஆக்கிரமிப்பு செய்த திரு.மனோகர், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பொய் வழக்கு தொடர்ந்துள்ளார். அதன் வழக்கு எண். .P.No.22796 of 2018 –ற்கு திரு.மகேந்திரன் வழக்கறிஞருக்கு வழக்காடு கட்டணம் ரூ.7500/– வழங்க மன்றம் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.கஎண். 3568/2018/எப்)

---

**மன்றப்பொருள்:11**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் தானியங்கி குடிநீர் மையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாளிதழில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் வெளியிடப்பட்டதற்கு அதற்கான செலவினம் அக்கார்டு அர்வர்டைசிங் ஏஜென்சிஸ் நிறுவனத்திற்கு ரூ. 86,625/–யை வழங்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்,

---

**<u>மன்றப்பொருள்:12</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் 2018—19—ம் ஆண்டிற்கு திடக்கழிவு மேலாண்மைப்பணி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (SHPC-II) வார்டு—3, காளவாசலில் உள்ள பழைய குப்பைகளை பிரித்தெடுக்கும் பணிக்கு 25.9.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோர அறிவிப்பு விளம்பரம் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் வெளியிடப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ. 71820/—யை எம்/எஸ்.பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்:13</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் 2018—19—ம் ஆண்டிற்கு திடக்கழிவு மேலாண்மைப்பணி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (SHPC-II) வார்டு—22, பேரையூர் ரோடு, பொது மயானத்தில் நுண்ணிய உரமாக்கும் பணிக்கு 26.9.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோர அறிவிப்பு நாளிதழில் வெளியிடப்பட்டது. எம்/எஸ்.பிரைட் அட்வர்டைசிங் மூலம் விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ. 71820/—யை வழங்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்:14</u>**

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். W.P.No.20826 of 2017 வழக்கில் தொடர்புடைய முறையான கட்டிட அனுமதி பெறாமல் இயங்கி வந்த 18 மண்டபங்களை 21.12.2018—ம் தேதி அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது. அதற்குரிய பொருட்கள் வாங்கிய வகையில் செலவினத்தொகை ரூ. 4730/— ஆகும். மேற்படி தொகையை செலவு செய்த இவ்வலவலக சுகாதார ஆய்வாளர் திரு. அகமதுகபீர் அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 2324/2017/எப்.1)

---

**<u>மன்றப்பொருள்:15</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் சாலையோர வியாபாரிகள் வியாபாரம் செய்வதற்கு வார்டு—10, பி.எம்.டி. நகரில் உள்ள இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், சாலையோர வியாபாரிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர விரிவான செயலாக்க திட்டம் தயார் செய்து தரும்படி நகராட்சி நிர்வாக இணை இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2010/2017/யூ.பி.ஏ2, நாள்.7.8.2018, அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் சாலையோர வியாபாரிகளுக்கான அடிப்படை

வசதி செய்வதற்கு ரூ. 17.60 இலட்சத்திற்கு முதல் கட்டமாக 51 நபர்களுக்கு விரிவான செயலாக்க திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை முழு அரசு மான்யமாக பெறலாம்.

---

**மன்றப்பொருள்:16**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் நல்லமுறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்தின் போது நில இடங்கில் பழுது நிக்கம் பணி மேற்கொள்ளப்பட்டது. குடிநீர் அவசர அவசியம் கருதி அதற்குரிய பொருட்கள் வாங்கிய வகையில் செலவினத்தொகை ரூ. 5940/– ஆகும். மேற்படி தொகையை செலவு செய்த இவ்வலுவலக குழாய் பொருத்துநர் திரு. கதிரேசன் அவர்களுக்கு Section 15 குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்.
2.தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)–ன்கீழ் பணி மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

---

**மன்றப்பொருள்:17**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் துறை அமைச்சர் தலைமையில் டெங்கு விழிப்புணர்வு கூட்டம் மற்றும் பேரணி நடைபெற்றது. அதை புகைப்படம் எடுக்கப்பட்டது. மேலும் கட்டிட அனுமதியின்றி செயல்படும் திருமண மண்டபங்களை பூட்டி சீல் வைத்தகோது போட்டோ மற்றும் வீடியோ எடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. இதற்கான செலவினம் ரூ. 12650/–யை இப்பணி மேற்கொண்ட கே.பி.என். போட்டோ ஸ்டுடியோ உரிமையாளர் திரு. பி.நாகராஜன் என்பவருக்கு தொகையை வழங்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**மன்றப்பொருள்:18**

உசிலம்பட்டி நகராட்சியில் குடிநீர்பிரிவு, சுகாதாரப்பிரிவு, மின்சார பிரிவு மற்றும் எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள உபயோகமற்ற இரும்பு பொருட்கள் அலுவலகத்தில் உள்ள மோட்டார்களை பொது ஏலத்தில் விடும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி ஏல அறிவிப்பு 'மக்கள்குரல்' நாளிதழில் வெளியிடப்பட்டது. அதற்கான செலவுத்தொகை ரூ. 16,582/–யை 'மக்கள்குரல்' நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

---

**மன்றப்பொருள்:19**

இந்நகராட்சி 2018—19—ம் ஆண்டிற்கு அலுவலகத்திற்கு தேவையான ஆபீஸ் கவர் பெரியது, ஆபீஸ் கவர் சிறியது, ஏ4 பச்சை கவர், கட்டிட மனுக்கள் வருகை பதிவேடு, கட்டிட அனுமதி விண்ணப்பம், ஏ4 வெள்ளை பேப்பர் ஆகியவை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. அதற்கான உத்தேச செலவினம் ரூ. 13,000/—த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்.

2.எழுது பொருட்கள் அவசர அவசியம் கருதி பொருட்கள் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2014/எச்1.)

---

**மன்றப்பொருள்:20**

இந்நகராட்சி அலுவலகத்திற்குத் தேவையான எழுது பொருட்கள் கொள்முதல் செய்ய ரூ.13,000/—த்திற்கு மன்ற தீர்மான எண்.19, நாள். 31.12.2018—ல் அனுமதி பெற்றதின் அடிப்படையில் 20.12.2018 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எ. | விபரம் | பாரதி அச்சகம் உசிலம்பட்டி | | விநாயகா பிரஸ் கம்ப்யூட்டர் ஆப்செட் பேரையூர் ரோடு உசிலம்பட்டி | சன் ஆப்செட் பிரஸ், 7/22, பேரையூர் சாலை, உசிலம்பட்டி |
|---|---|---|---|---|---|
| | | எண்ணம் | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | 9x4 ஆபீஸ் கவர் | 2000 | 1800 | 2000 | 1900 |
| 2 | 12x5 ஆபீஸ் கவர் | 1000 | 1700 | 1900 | 1800 |
| 3 | 14x10 பச்சை கலர் பிளேன் | 100 | 600 | 650 | 600 |
| 4 | மனுக்கள் அனுமதி பதிவேடு | 2 புக் | 700 | 800 | 750 |
| 5 | கட்டிட அனுமதி விண்ணப்பம் | 500 பாரம் | 6000 | 6400 | 6300 |
| 6 | டி.என்.பி.எல். ஏ4, 85ஜிஎம் | 10 பாக்கெட் | 2150 | 2300 | 2200 |

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பாரதி அச்சகம் உசிலம்பட்டி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்.

2.குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பாரதி அச்சகம் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கலாம்.

(ந.க.எண். 957/2014/எச்1.)

---

**மன்றப்பொருள்:21**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள மதுரை ரோடு வடக்கு, ஸ்ரீனிவாசா நகர், பி.எம்.டி. நகர் மற்றும் பாண்டிகோவில் தெருவில் உள்ள குடிநீர் குழாய் பழுதடைந்துள்ளதால் புதியதாக குடிநீர் குழாய் பழுதடைந்துள்ளதால் புதியதாக குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச

மதிப்பீட்டுத்தொகை ரூ. 6.00 இலட்சத்திற்கு மன்றத் தீர்மான எண். 10, நாள். 31.10.2018 அன்று அனுமதியளித்தன் அடிப்படையில் 4.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1). திரு. பி.காட்டுராஜா, ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.06 சதவிகிதம் குறைவு

2). திரு. ஆர்.ரவிக்குமார் ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.52 சதவிகிதம் அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.காட்டுராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.காட்டுராஜா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

---

**மன்றப்பொருள்:22**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–23, கவண்டன்பட்டி சாலை நீதிமன்றம் அருகில் உள்ள 4.00 இலட்சம் கொள்ளளவுள்ள நீர்த்தேக்க தொட்டியின் படிக்கட்டு கட்டும் பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 2.30 இலட்சத்திற்கு மன்றத் தீர்மான எண். 5, நாள். 30.11.2018 அன்று அனுமதியளித்தன் அடிப்படையில் 4.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1). திரு. பி.காட்டுராஜா, ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.05 சதவிகிதம் குறைவு

2). திரு. ஆர்.ரவிக்குமார் ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.45 சதவிகிதம் அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.காட்டுராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.காட்டுராஜா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

---

**மன்றப்பொருள்:23**

உசிலம்பட்டி நகராட்சியில் மதுரை ரோடு தெற்குப்பகுதியில் புதியதாக டி.ஐ. பைப் பதிக்கும்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 6.00 இலட்சத்திற்கு மன்றத் தீர்மான எண். 11, நாள். 30.11.2018 அன்று அனுமதியளித்தன் அடிப்படையில் 4.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1). திரு. பி.காட்டுராஜா, ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.06 சதவிகிதம் குறைவு

2). திரு. ஆர்.ரவிக்குமார் ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.52 சதவிகிதம் அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.காட்டுராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.காட்டுராஜா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

---

**மன்றப்பொருள்:24**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள பழைய உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Bio-Mining முறையில் பிரித்தெடுக்கும் பணியை தொடங்க உள்ளதால் தினமும் 24 வார்டுகளிலும் சேகரமாகும் குப்பைகளை உத்தப்பநாயக்கனூர் உ.வாடிப்பட்டியில் உள்ள புதிய உரக்கிடங்கில் கொட்டுவதற்கு 130 மீட்டர் நீளமும் 25 மீட்டர் அகலமும் 5 மீட்டர் ஆழமும் கொண்ட குழி அமைப்பதற்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்,

2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொது நிதியிலிருந்து வழங்கலாம்.

---

**மன்றப்பொருள்:25**

உசிலம்பட்டி நகராட்சிக்கு புதிய குடிநீர் திட்டம் ரூ. 73.03 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு மேற்படி பணியானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளது. உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திட்ட உருவாக்கம் கோட்டம், மதுரை அவர்களின் 10.10.2018–ம் தேதிய கடித எண். 1709/எப்–உசிலம்பட்டி/ஏஇஇ/2018–ல் கேட்டுக்கொண்டதற்கிணங்க 1 வருட காலத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வருடாந்திர பராமரிப்புப்பணி மேற்கொள்ளவும் அதற்காக ஆகும் செலவினம் ரூ. 1.30 கோடியினை நகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடு செய்யவும் மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்,

2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கலாம்.

---

**மன்றப்பொருள்: 26**

உசிலம்பட்டி நகராட்சியில் குடிநீர் பிரிவு சுகாதாரப்பிரிவு, மின்சார பிரிவு மற்றும் எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள உபயோகமற்ற பழைய இரும்பு பொருட்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நல்ல முறையில் இயங்கக்கூடிய மோட்டார்கள் ஏலம் விடும் பணிக்கு 28.12.2018–ம் தேதி அன்று காலை 11.00 மணிக்கு ஏலம் நடைபெற்றது. அதில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்ல. பொது ஏலத்தில் இரண்டு நபர்கள் 1.திரு. ரா.ராஜேந்திரன், 2.திரு. பி.வி.வாசியப்பன் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட இரண்டு நபர்களை வரவழைத்து ஆணையாளர் தலைமையில் நகராட்சிப் பொறயிாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர் முன்னிலையில் ஏலம் கீழ்க்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்யப்பட்டது.

| வ.எ. | இனங்கள் | நகராட்சி நிர்வாகம் நிர்ணயம் செய்த விலை | ஒப்பந்ததாரர் திரு. ஆர்.ராஜேந்திரன் | ஒப்பந்ததாரர் திரு. பி.வி.வாசியப்பன் |
|---|---|---|---|---|
| 1 | அலுவலகம் மற்றும் குடிநீர் | 1). பழைய இரும்பு ரூ. 17.00 கி.கி. | 1). பழைய இரும்பு ரூ. 17.50 கி.கி. | கேள்வி எழவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேக்கத்தொட்டி வளாகத்திற்குள் உள்ள உபயோகமற்ற பழைய இரும்பு சாமான்கள் மற்றும் மின் சாதனங்கள் | 2). சோக் ரூ. 1.00/எண்ணம்<br>3). டியூப்லைட் ரூ. 8.00/எண்ணம்<br>4). பல்பு – ரூ. 0.20/எண்ணம்<br>5).ஹோல்டர்ரூ.0.10/எண்ணம் | 2). சோக் ரூ. 1.00/எண்ணம்<br>3). டியூப்லைட் ரூ. 8.00/எண்ணம்<br>4). பல்பு – ரூ. 0.20/எண்ணம்<br>5). ஹோல்டர் ரூ.0.10/எண்ணம் | |
| 2 | இயங்கி கொண்டிருக்கிற 0.5 எச்.பி. மற்றும் 1.00 எச்.பி. மோட்டார் | 0.5 எச்.பி. மற்றும் 1.00 எச்.பி. மோட்டார் ரூ. 1700 | 0.5 எச்.பி. மற்றும் 1.00 எச்.பி. மோட்டார் ரூ. 1800 | கேள்வி எழவில்லை |
| 3 | நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பழைய மோட்டார் மற்றம் வயர்கள் | 1). இரும்பு – ரூ. 17.00/கி.கி.<br>2). அலுமினியம் – ரூ. 80/– கி.கி.<br>3). காப்பர் – ரூ. 360/கி.கி. | 1). இரும்பு – ரூ. 17.50/கி.கி.<br>2). அலுமினியம் – ரூ. 80/– கி.கி.<br>3). காப்பர் – ரூ. 360/கி.கி. | கேள்வி எழவில்லை |

மேற்கண்டவாறு ஏலத்தொகை குறிப்பிடப்பட்டதில் அதிகம் ஏலத்தொகை தந்துள்ள திரு. ஆர்.ராஜேந்திரன் விலையை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கு அதிகம்ஏலத்தொகை தந்துள்ள திரு. ஆர்.ராஜேந்திரன் என்பவரின் விலையை ஏற்று வேலை உத்திரவு வழங்கலாம்.

---

**மன்றப்பொருள்: 27**

உசிலம்பட்டி நகராட்சி பேருந்து நிலைய வளாகத்திற்குள் உள்ள தார்ச்சாலை பராமரிப்பு பணியை அவசர அவசியம் கருதி உடனடியாக மேற்கொண்ட திரு. பி.காட்டுராஜா ஒப்பந்ததாரர் செலவு செய்த தொகை ரூ. 1,99,195/–யை மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணியை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)–ன்கீழ் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

---

**மன்றப்பொருள்: 28**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–21, மீனாம்பாள் நகர் பகுதியில் கிராவல் பரப்பும் பணியை அவசர அவிசயம் கருதி பணி மேற்கொண்டதையும், ஒப்பந்ததாரர் திரு. பி.காட்டுராஜா என்பவருக்கு ரூ. 63,887/–யை வழங்குவதையும் மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்ற அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணியை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)–ன்கீழ் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

---

<u>மன்றப்பொருள்: 29</u>

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு ஸ்ரீ முருகன் ஸ்டோர் அவர்களிடம் கொசுபேட், 2 குயர் நோட்டு குறுக்கு கோடு, 2 குயர் நோட், 1 குயர் நோட் பிரிவு 15–ன்கீழ் வாங்கியதற்கான செலவினம் ரூ. 3,500/– த்திற்கு மன்றத்தின் பார்வைக்கு.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 957/2014/எச்.1)

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
உசிலம்பட்டி நகராட்சி